பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 14 வெள்ளிக்கிழமை (27-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 121

# இராணுவத்துக்கு ஏற்படும் இழப்பை உயர் அதிகாரி ஒப்புக் கொள்கிறார்!

## முச்சந்தி முரளி



எதனைத்தான் கொடுத்தாலும் போன உயிர் திரும்பவா போகுது பாருங்கோ!

## புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் ஆயுதத் தளபாடங்களும் சேதமாம்

கொழும்பு, மார்ச் 27

விடுதலைப் புலிகள் அண்மைக் காலமாக கிழக்கிலும், வடக்கிலும் நடத்தி வரும் புதுவித அதிரடித் தாக்குதல்களினால் படையினருக்குப் பெரும் ஆளணி இழப்பு ஏற்பட்டு வருவதாக இராணுவ உயர் அதிகாரி நேற்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

புலிகளின் புதுவித தாக்குதல்கள், கவசப் படை எதிர்ப்புத் தாக்குதல் ஆகியவற்றினால் கனரக வாகனங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் உட்பட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களும் சேதமடைந்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் முறைகளில் பல மாற்றங்கள் கொண்டுவந்துள்ளனர். கிழக்கிலும், வடக்கிலுமாகத் திடீர் திடீரென, அடிக்கடி அதிரடித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அத்தாக்குதல்களில் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான துருப்புக்கள் பலியாகின்றனர் கடந்த மூன்று மாதங்களிலும் சராசரி மாதாந்தம் 100 படையினர் பலியாகி இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் நடக்கும் வாராந்தப் பத்திரிகையாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அப்போது இராணுவத்துக்கு சமீப காலமாக ஏற்பட்ட ஆளணி இழப்புக் குறித்துச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளரான கேர்ணல் சரத் முனசிங்க, பலியுண்ட எண்ணிக்கையைக் குறிப்பிடாமல் அதிக துருப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவுக்குழுவுக்கு
## புலிகள் தரப்பில் யோசனை சமர்ப்பிக்கப்படமாட்டாது

கொழும்பு, மார்ச் 27

இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் எவ்வித யோசனையையும் தெரிவிக்கப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாக கொழும்பில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக்குழுவிடம் விடுதலைப் புலிகள் இத்தகவலைத் தெரிவித்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருக்கிறது.

இதேவேளை —

விடுதலைப் புலிகள் சார்பாக சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கையளித்த கடிதத்தை ஏற்றுக் கொள்ள

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொக்கட்டிச் சோலையில்
## கொலையுண்டோரின் உறவினருக்கு நட்ட ஈடு

கொழும், மார்ச் 27

கொக்கட்டிச்சோலைச் சம்பவத்தில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் உறவினர்களுக்கு 52 லட்சத்து 40 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட சிபார்சின் அடிப்படையில் இந்த நட்ட ஈடு வழங்கப்படவிருக்கிறது.

இதேவேளை — கொக்கட்டிச்சோலை படுகொலை பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்வது என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிபார்சுகளை அமைச்சர் லொக்குபண்டாரா, நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அந்தச் சிபார்சுகள் வரு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இலக்கை அடையும் வரை
## இராணுவ நடவடிக்கை மணலாறில் தொடருமாம்

கொழும்பு, மார்ச் 27

முல்லைத்தீவு மாவட்டம் மணலாறில் இராணுவத்தினர் தமது இலக்கை அடையும் வரை ஒப்பரேஷன் ஹயபார இராணுவ நடவடிக்கை தொடரும்.

இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா நேற்று செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான மேலும் 2 அல்லது 3 முகாம்களைக் கைப்பற்ற வேண்டியுள்ளது என்றும் இதுவே பாதுகாப்புப் படையினரின் இலக்காகும் என்றும் கேர்ணல் முனசிங்கா சொன்னார்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில்—இந்த ஆண்டு இறுதிக்குள் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கும் முயற்சியில் ஆயுதப் படையினர் தங்களாலான தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றனர் என்றும் கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

[இ-எ]

## தமிழக அகதி முகாம்களில் வைத்திய வசதி புறக்கணிப்பு

### வாந்தி பேதியால் ஐவர் மரணம்

சென்னை, மார்ச் 27

ஈழத் தமிழர்கள் தங்கி உள்ள தமிழக அகதி முகாம்கள் சிலவற்றில் வைத்திய வசதிகள் மறுக்கப்படுகின்றன. என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு, பவானிசாகர் அகதி முகாமில் வாந்தி பேதி நோய் காரணமாக கடந்த இரண்டு மாதங்களில் ஐந்து இலங்கைத் தமிழ் அகதிகள் உயிரிழந்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்பு முகாமுக்கு அடிக்கடி டாக்டர்கள் சென்று சிகிச்சை அளித்து வந்தனர் என்றும் கடந்த சில மாதங்களாக டாக்டர்கள் முகாமுக்கு செல்வதை நிறுத்திவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-எ]

## ஜெயலலிதாவுக்கு மேலதிக பாதுகாப்பு

### மத்திய அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 27

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

செல்வி ஜெயலலிதாவைக் கொலை செய்யும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை தமிழகத்திற்கு வந்திருப்பதாகக் கூறப்படுவதை அடுத்து, அவருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று லோக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பௌத்த குருமார் குழு அடுத்த புதன் வரும்?

கொழும்பு, மார்ச் 27

ஏழு பௌத்த பிக்குகள் கொண்ட நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று அனேகமாக அடுத்த புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யக் கூடும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பௌத்த குழு யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி கோரி, நயினாதீவு, வவுனியா விகாரைகளைச் சேர்ந்த பௌத்த குருமார் இருவர் கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு விண்ணப்பித்துள்ளதாக அறியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் செல்லும் பௌத்த குருமார் விடுதலைப் புலிகளுடனும் அங்குள்ள பொதுமக்கள் நிறுவனங்களுடனும் பேசுவர் என்றும், நிலைமையை நேரில் அறிந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது

[அ-5]

## புலிகள் குறித்து தெற்கில் அரசு பொய்ப் பிரசாரம்

### நேரில் கண்டபின் தூதுக்குழு திகைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்த நிலையில்தான் அரசாங்கத்தைப் பேச்சுக்கு அழைக்கின்றனர் என ஸ்ரீலங்கா அரசு பிரசாரம் செய்து வருவது எதுவித ஆதாரமுமற்றது என்பதை இப்போது நாங்கள் உணர்ந்திருக்கிறோம்''

தென்னிலங்கையில் இருந்து யாழ். வந்துள்ள கத்தோலிக்க உயர்மட்டத் தூதுக் குழுவினர் நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சிலாபம் ஆயர் அதி வண. மார்க்கஸ் பெர்ணான்டோ, கண்டி ஆயர் அதி வண. வியானி பெர்னான்டோ ஆகியோர் உட்பட ஐவர் கொண்ட உயர் மட்ட நல்லெண்ணத் தூதுக்குழு நேற்று முன்தினம் யாழ். வந்தது தெரிந்ததே.

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட ஆசிரிய சங்கம் ஏற்பாடு செய்திருந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

### இன்று பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தென்னிலங்கை நல்லெண்ணக் கத்தோலிக்கத் தூதுக் குழுவினர் இன்று காலை விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மற்றும் திரு. யோகரத்தினம் யோகி ஆகியோர் இன்றைய பேச்சில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

[இ-5]

## வினாத்தாள்கள் இன்று வரலாம்

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. [உயர்தர] விசேட பரீட்சைக்கான வினாத்தாள்கள் இன்று வெள்ளிக்கிழமை விமானம் மூலம் எடுத்துவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்கு செல்லும் வாகன அணி திரும்பி வரும் போது வினாத்தாள்களையும் எடுத்து வரும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

[இ-3]

## தீர்வுக்கு தெரிவுக்குழு இனம்கண்ட 3 அம்சங்கள்

கொழும்பு, மார்ச் 27

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இணக்கம் காண வேண்டிய மூன்று அம்சங்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் அடையாளங் காணப்பட்டுள்ளன.

அதிகாரப்பகிர்வின் எல்லை, பகிரப்பட வேண்டிய அதிகாரங்கள், வடக்கு - கிழக்கில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பு ஆகியவையே இம்மூன்று அம்சங்கள் என்று தெரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி கணபதி சின்னப்பிள்ளை
(மந்துவில்)

எம்மை நாமாக வாழ வழியமைத்த எம் பாச அன்னையாம் அன்புத் தெய்வத்தை நினைவு கூர்ந்து, அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்த அன்புள்ளங்களுக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் உதவி நல்கிய நல்லோருக்கும் நன்றி நவில்கின்றோம்.

அத்துடன் இன்று (27-03-92) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும், நாளை (28-3-92) சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகலரையும் அழைக்கின்றோம்

திரு. க. நடராசா,
(தலைவர், பனை அபிவிருத்திச் சபை),
திருமதி அ. இராசேந்திரம்
(ஸ்கந்தபுரம்)
க. செல்லத்துரை,
(ஸ்கந்தபுரம்),
க. தங்கராசா,
(பிரதம இலிகிதர் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு-யாழ். கச்சேரி),
க. இராசதுரை,
(அதிபர், யா/ நடேஸ்வராக் கல்லூரி),
க. இராசேந்திரம்,
(ஆசிரியர், கிளி/ கனகாம்பிகைக்குளம், கனிஷ்ட வித்தியாலயம்
க. சிவராசா,
(ஆசிரியர், யா/ சென் ஜேம்ஸ், ம. வி.).

66/3, திருவையாறு,
கிளிநொச்சி.
(20238(

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அச்சுவேலி தெற்கு
## வித்துவான் வி. சண்முகம்
(சைவப் புலவர்)
(இளைப்பாறிய ஆசிரியர்)

அமரர் வித்துவான் விசுவலிங்கம் சண்முகம் அவர்கள் கருவிலே திருவுடையவராய் அச்சுவேலியில் பிறந்து 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்ற நாவலரின் அருமருந்தன்ன வாக்கியத்துக்கு இலக்கியமாக வாழ்ந்தவர். தல யாத்திரைகளிலும் சிவ புண்ணிய காரியங்களிலும் ஈடுபட்டவர். சிறப்பாக அச்சுவேலி மதுரை மீனாட்சியம்மன் கோவில் பரிபாலனத்திற்கு பல்லாண்டுகளாக உதவியதோடு அக்கோவில் புனருத்தாரண வேலைகளை அடியார்களின் ஒத்தாசையுடன் சிறப்புற முன்னின்று செய்து குடமுழுக்குக் கண்டவர்.

''பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ் நரகக்
குழிக்கே அழுத்தும் கயவர் தம் மோடென்ன கூட்டினிலே''

என்று நினைத்தோ இறைவி பதம் சேர்ந்தார். ஈழத்திலே தமிழுக்கும், சைவத்துக்கும் பெரும் தொண்டாற்றிய வள்ளலாரின் 31 ஆம் நாள் கிரியைகள் இன்று நடைபெறுகின்றன

அவரது ஆன்மா சாந்தியடைய மீனாட்சியம்மையின் பாதாரவிந்தங்களை இறைஞ்சுகிறோம்.

அச்சுவேலி தெற்கு,
தோப்பு மீனாட்சி அம்மன் ஆலய-
பரிபாலன சபையினர்.
[20240]

# இந்திய பொலீஸார் மீது மன்னிப்புசபைகுற்றச்சாட்டு

ஜெனிவா, மார்ச் 27

இந்திய பொலீஸார் தடுப்புக் காவலில் உள்ளவர்களைச் சித்திரவதை செய்வது வழக்கமாகி விட்டது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுளளது.

பொலீஸாரின் காவலில் இருக்கும் போது சாகும் அளவிற்குச் சித்திரவதை செய்யப்பட்ட நானூறுக்கும் அதிகமானோரின் பெயர் விவரங்களையும் மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களில் ஒரு சில சம்பவங்கள் குறித்து மட்டுமே சரியான விசாரணை நடத்தப்படுவதாகவும் சபை தெரிவித்துள்ளது.

இதனை மறுத்துள்ள இந்திய அரசு, மனித உரிமைகளைக் பாதுகாக்க தான் எடுத்து வரும் நடவடிக்கைகளை சர்வதேச மன்னிகபுச் சபை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை 1985 ஆம் ஆண்டிலிருந்து பொலீஸாரின் சித்திரவதைகளால் இறந்த 415 பேரின் பெயர்ப்பட்டியலுடன் முழு விவரங்களையும் வெளியிட்டுள்ளது. [த-10]

## லலித்தின் மெய்ப்பாதுகாவலர் பொலீஸாரால் கைது

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர் என்று பொலீஸாரினால் அடையாளங் காணப்பட்ட ஒருவர் வேறு இருவருக்கு அங்கீகாரமின்றி சுழல் துப்பாக்கி ஒன்றைக் கொடுத்ததாகச் சொல்லப்படுவது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

29-3-92 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப 3-00 மணிக்கு நடைபெற இருந்த அங்குரார்ப்பணக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்

-அதிபர்.

[சி-1690]

# 31 ஆம் நாள் இதய அஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும்



## திருமதி சதாசிவம் தங்கச்சியம்மா

தோற்றம்: 12-6-1912
மறைவு: 26-2-1992

கண்ணைப் போல் எமைக் காத்து வளர்த்திட்டீர்!
விண்ணுக்கு ஏகியும் அங்கு விருந்தாக நின்றிட்டீர்!
மண்ணின் நிலையாமை மதித்தவர்போல் எம்மனதை
புண்ணாக்கி விட்டு நீங்கள் புறமாகிப் போனதென்ன?
'ஆயிரம் பிறைகண்ட அம்மாவே நீர் இறை நிழலில் - முத்தி பெற
அரியாலை ஸ்ரீ முத்து வைரவர் என்றும் துணைநிற்பார்'.

அன்னையின் ஆத்ம சாந்திக் கிரியை இன்று நடைபெறும். அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உமது ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

9/12, திருமகள் வீதி,
நா[illegible]
யாழ்ப்பாணம்.
[20218]

யாழ். மாநகர சபை
# சனசமூக நிலையங்களுக்கு

நாளை [28 - 03 - 92] சனிக்கிழமை மாலை 4. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறும் கலந்துரையாடலில், யாழ். மாநகரசபைப் பிரிவுக்குள் இயங்கும் எல்லா சனசமூக நிலையங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் தவறாது பங்கு பற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளூராட்சி திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
92-03-26

சுந்தரம் டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்

[சி/1739]

# மரண அறிவித்தல்கள்

## Dr. S. செல்வராசா

பழம்றோட் கந்தர்மடத்தைச் சேர்ந்த Dr. S. செல்வராசா 25-3-1992 இரவு காலமானார். இவர் தனலட்சுமியின் அன்புக் கணவரும். Dr. யோகநாதன் [லண்டன்], Dr. திருமதி யோகரஞ்சிதம் [லண்டன்], திருமதி ஜெயரஞ்சிதம், ஈஸ்வரநாதன் [கணக்காளர், லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மஞ்சுளா [லண்டன்]. Dr நவரத்தினம் [லண்டன்], காலஞ்சென்ற சிவலிங்கம் [Techoical Officer] ஆகியோரின் அன்பு மாமனாரும், லண்டனில் உள்ள மகேஸ், நிலுஷா, கோபி, ஜனு மற்றும் பிரணவன் [பரிஜோவான் கல்லூரி மாணவன்], சிவாஞ்சலி [புனித ஜோன் பொஸ்கோ மாணவி] ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வி தங்கலட்சுமி [சங்கீத ஆசிரியை, யாழ். இந்துக் கல்லூரி] அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

இல. 16, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

திருமதி S. தனலட்சுமி
[மனைவி]
[20247]

## சபாரத்தினம் கதிரவேலு

உரும்பராயில் பிறந்தவரும் சாவகச்சேரியில் வசித்தவருமான சபாரத்தினம் கதிரவேலு [இளைப்பாறிய பொது சௌக்கிய சேவைப் பரிசோதகர்] 25-03-1992 இல் காலமானார். இவர் நாகபூரணத்தின் அன்புக் கணவரும், தயாபரன் [சவுதி அரேபியா], தயாரூபி, ராஜீவி [யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம் ஆண்டு I]யின் அன்புத் தந்தையும், சாரதாவின் அன்பு மாமனாரும், நிரோசனின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 28-03-1992 சனிக்கிழமை சாலை ஆஸ்பத்திரி முன்பாக கண்டி வீதி சாவகச்சேரியில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10.00 மணிககு கணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[20246]
மனைவி, பிள்ளைகள்

## C. இரத்தினசபாபதி

காலஞ் சென்ற மகேசனின் மைத்துனரும், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான C. இரத்தினசபாபதி லண்டனில் 24- 3 - 92 இல் காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் [U. K ], பகிரதன் [Hatton National Bank] அவர்களின் அன்புத் தந்தையும், சுதுமலை வடக்கு அழகரட்ணம் ஜெர்மையா அவர்களின் மருமகனுமாவார்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி மஞ்சுளா வடிவேலு
[பெறாமகள்]
65, ருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை.

''சீத்தாராம்''
கா. வடிவேலு,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
[20242]

## இளையதம்பி சின்னத்துரை

புங்குடுதீவு — 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி சின்னத்துரை அவர்கள் 26-3-92 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்றவர்களான இளையதம்பி கண்ணம்மாவின் புதல்வரும் நாகமுத்துவின் அன்புக் கணவரும், கலாரஞ்சினி, லோகதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, கனகசபை, நமசிவாயம், திருமதி சுப்பையா பொன்னம்மா, திருமதி விசுவலிங்கம் சின்னப்பிள்ளை, திருமதி கந்தையா அன்னபூரணம் ஆகியோரின் சகோதரரும், ஐயம்பிள்ளை பொன்னாச்சி அவர்களின் மருகருமாவார்.

அன்னாரின் ஈமககிரிகை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
கு. சந்திரன்
(கிராம அலுவலர்-புங்-4)

699/2 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(20250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதமும் நினைவு கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 27

அன்னைபூபதி நினைவாக இடம்பெற்று வரும் உண்ணா விரதமும், நினைவுக் கருத் தரங்கும் இன்று பருத்தித் துறை வியாபாரிமூலை பிள் ளையார் கோவிலில் நடை பெறும்.

கருத்தரங்கில் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் அரசண்ணா, கடாபி மாஸ்டர், தணிகைச் செல்வி ஆகியோர் கருத்துரை வழங்கு வர். (த)

# கிறிஸ்தவ கவியரசர் நினைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

கிறிஸ்தவ கவியரசர் மகா வித்துவான் ஹென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளை யின் நினைவு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3–30 மணிக்கு சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நடை பெறும்.

விழாவிற்கு பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பல வாணர் தலைமை வகிப் பார். பல்கலைக்கழக நுண் கலைத்துறை தலைவர் பேரா சிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ சண்முக தாஸ், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். சிவ லிங்கராசா, யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் அருள்திரு அறிவர். எஸ் ஜெபநேசன், இறையியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அருள்திரு டி. ஆர். அம்பலவாணர் ஆகி யோர் உரையாற்றுவார்கள்.

விழாவில் கவிதைகள், பாடல்கள், நாடகம் ஆகிய கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். [த]

# தமிழீழ நோக்கு சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

தமிழீழ நோக்கு சஞ்சிகை யின் வெளியீட்டு நிகழ்ச்சி இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாச பதி அரங்கில் நடைபெறும்.

பேராசிரியர் நா. பால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் கலாநிதி சபா. ஜெயராசா வெளியீட்டுரையையும் —

விடுதலைப் புலிகள் இயக் கப் பிரமுகர்களான திரு. யோகரத்தினம் யோகி, திரு. இளங்குமரன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் நிகழ்த் துவர்.

நுண்கலைத் துறைத் தலை வர் பேராசிரியர் கா. சிவத் தம்பி, பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், திரு. மு. திரு நாவுக்கரசு ஆகியோரின் ஆய் வுரைகளும் இடம்பெறும். [த-5]


உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (30-03-1992) திங்கட்கிழமை காலை 6-13 மணி முதல் 7-01 மணி வரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**தேவகுமார்**
அவர்களுக்கும்

எங்கள் ஏக புத்திரி
திருநிறை செல்வி
**மைதிலி**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து மணமக்களை ★ ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். ★

வரவேற்புபசாரம்: 01-04-1992 புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

★ இவ் வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி சி. சிவானந்தன்,
92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

திருமதி வ. செல்வரட்ணம்,
செல்வன் செ. மனோகரன்,
உசன், மிருசுவில்.

[இரு வீட்டார் அழைப்பு]

[20208]



உ

## ★ விவாஹ சுபமுஹூர்த்த அழைப்பு ★

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் பங்குனி மாதம் 16ஆம் நாள் (29-03-1992) ஞாயிற்றுக்கிழமை திருவோண நக்ஷத்திரமும், அமிர்தயோகமும், இடப லக்கினமும் கூடிய காலை 8-55 மணிமுதல் 10-15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

அ. சிவசாமிக் குருக்கள் அவர்களின்
கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**காயத்திரிதேவி**
அவர்களை

செ. பாலசுப்பிரமணியக் குருக்கள்
அவர்களின்
ஏக புத்திரன்
சிரஞ்சீவி
**நகுலேஸ்வர சர்மா**
(யாழ். இந்துமகளிர் கல்லூரி,
விநாயகர் ஆலய அர்ச்சகர்)
அவர்களுக்கு

கன்னிகாதானமும், திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணமும் செய்ய விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், மண மகள் இல்லத்தில் நடைபெறும் மேற்படி முகூர்த்தத்திற்கும் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

மணமகன் இல்லத்தில்: அதிகாலை 5-30 மணிக்கு சமாவர்த்தனம், மாலை 4-00 மணியளவில் வதூவர கிரகப்பிரவேசம்.

★ வரவேற்பாளர்கள் ★

ஸ்ரீ பிரம்மஸ்ரீ நா. சண்முகரத்தின சர்மா
ச. இந்திராதேவி
பிரம்மஸ்ரீ கு. சோமசுந்தரக் குருக்கள்
சோ. நிலாயதாட்சி

பிரம்மஸ்ரீ ந. பாலசுப்பிரமணிய சர்மா
பா கிரிராஜ கன்னிகாம்பிகை
பிரம்மஸ்ரீ ந. தாமோதரஐயர்
தா. வல்லவாம்பிகை

(இரு வீட்டார் அழைப்பு)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ அ. சிவசாமிக்குருக்கள்
(தம்பதிகள்),
செல்லப்பிள்ளையார் கோவிலடி,
மட்டுவில், வடக்கு,
சாவகச்சேரி.

திருமதி பாலசுப்பிரமணியக்குருக்கள்-
சீதாலெட்சுமி அம்மா,
74, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

[சி-1737]



## பெயர் மாற்றம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையை தற்பொழுது வசிப்பிடமாகக் கொண்ட வெங்கடேசப் பெருமாள் ''கணேசா'' ஆகிய நான் இதுவரை கணேசா என வழங்கி வந்த பெயரினை எண் சோதிட ஆய்வாளர் திரு. S. S. Bhalan [குளப்பிட்டி] என்பவர் மூலமாக வெங்கடேசப் பெருமாள் ''கணேசலிங்கம்'' என சிறு மாற்றம் செய்துள்ளேன் என்பதனை ஸ்ரீலங்கா குடியரசுக்கும், ஏனையோருக்கும் அறியத்தருகின்றேன்.

இங்ஙனம்:
உண்மையுள்ள,
கணேசலிங்கம்.

[20233]



## மேடை
## வாடகைக்கு அமைத்தல்

சகல விதமான நாட்டிய, நாடக நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடத்துவதற்குரிய மேடைகளும், கலியாணப் பந்தலுக்குரிய மேடைகளும்அதிரடிப் பாணியில் அமைத்துத் தரப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

திரு. K. L. செல்லத்துரை,
6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

[4570]



THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

## O/L Dec. 92
## துரித மீட்டல் வகுப்பு

பகல் நேரம்/மாலை நேரம்

★ 91 Dec இல் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் 92 Dec இல் 2ஆம் முறை தோற்ற விரும்புபவர்களுக்குமான வகுப்பு.

ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிந்து இடத்திற்கு முந்துங்கள்.

[4571]


## 4 th Death Anniversary



*Mrs. Ponnamah Arulampalam*

**Fondly Remembered by**

Children: Thavamany Nadarajah [Ramanie]
Navamany Selvarajah (Ranee]

Grand Children: Dusyandan, Nilluka.

Jaffna. (20148)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி.

[சி–1723]

### தேவை

நல்ல நிலையிலுள்ள வீடியோ டெக் மொடல் L 10, L 15, L 18, ஸ்டில் போட்டோ கமரா (Still Photo Camera) தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்க. வீ. ரி. சற்குணம், இல. 19, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி/1694]

### மணமகன் தேவை

அண்மையில் கனடா சென்றிருக்கும் யாழ். இந்து, அழகான, செவ்வாய்க் குற்றமற்ற ஆசிரியைக்கு கனடாவில் மணமகன் தேவை. வயது 27, நட்சத்திரம்: மகம். உயரம் 5' 3''. தொடர்பு இல 838, C/o உதயன். [4567]

### இலவச திருமண சேவை

31வயது, அத்தம், M.B.B S. பெண்ணுக்கு Professional தரத்தில் மணமகன் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும், சந்திப்பு ஞாயிறு காலையில் மட்டும். து விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4562]

### இலவச திருமண சேவை

27 வயது, B. Sc. அரச சேவையாளர், ரோகிணி 1, பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்டும். விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4561]

### மணமக்கள் தேவை

யாழ். இந்து, குற்றமற்ற 26 வயது மணமகன் ''சுவிஸ்'' இல் இருந்து வந்தவருக்கு மணப்பெண் தேவை. எம்மிடம் சைவபோசன மணமக்களும், மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோர் பலரும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20232]

### மணப்பெண் தேவை

கத்தோலிக்க 30 வயது டாக்டருக்கும், 31 வயது B. Sc. சிவில் எஞ்ஜினியருக்கும், 30 வயது விஞ்ஞானப் பட்டதாரிக்கும், குற்றமற்ற 33 வயது இந்து விஞ்ஞானப் பட்டதாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20231]

### பரீட்சை (ஆண்டு - 6, 4)

ஆண்டு 6 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை, 28-3-92 சனி மு.ப. 7-00, மு.ப.11-00 நடைபெறும் ஆண்டு 4 பரீட்சை, 29-3-92 ஞாயிறு மு.ப 8-00 மு.ப. 11-00 நடைபெறும். பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20230]

## தமிழ் மொழித்திறன் போட்டிகள்

பருத்தித்துறை, மார்ச் 27 வடமராட்சிக் கோட்ட மட்டத்திலான தமிழ் மொழித்திறன் போட்டி நாளையும், நாளை மறுதினமும் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். [த-118]

---

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

## தமிழ்த் தொண்டர் ஈழகேசரி நா. பொன்னையா நாற்பத்தோராவது நினைவு தினம்

**இடம்:** கம்பன் கோட்டம், நல்லூர்

**காலம்:** 29–03–1992 ஞாயிறு காலை 9-00 மணி

**தலைமை:** கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்

**பிரதம அதிதி:** கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் (அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

நினைவுப் பேருரை

''ஈழகேசரித் தமிழ்''

கலாநிதி: அ. சண்முகதாஸ் அவர்கள் (பேராசிரியர் - தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

நாடகம்

கலைப்பேரசு ஏ. ரி. பொன்னுத்துரை வழங்கும் ''தாளக் காவடி''

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. விஸ்வநாதன்,
பிரசார செயலாளர்.

[20213]

---

## கலை, வர்த்தகக் கல்லூரி

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான**

**கலந்துரையாடல்**

**காலம்: 06-04-92 — 06-05-92 வரை**

**நேரம்: காலை 8.00 மணி**

கணக்கியல் — ஸ்ரீ

பின்வரும் பகுதிகள் செய்து முடிக்கப்படும்
வாடகைக் கொள்வனவு, இறைக்கணக்கு,
கொள்கலன் கணக்கு, முதலீட்டுக் கணக்கு,
பங்குடமையினை பகுதி பகுதியாகக் கலைத்தல்

முகாமைத்துவம் — பிரபல ஆசிரியர்
பொருளியல் — குமாரவேல்
தமிழ் — திரு. குழந்தை
இந்து நாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
அளவியல் — திரு. சயந்தன்
அரசியல் — குமார்

குறிப்பு:
- முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.
- அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

– நிர்வாகி.

[சி-1699]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 09 — 1954

மறைவு: 27 — 03 — 1990

**சிவராமலிங்கம் சிவமோகன்**
**(ராஜாஜி)**

ஆண்டு இரண்டு ஆனாலும் நீள நினைக்கும்;

மனைவி, மக்கள், பெற்றோர், தம்பி, உற்றார், உறவினர்கள்.

''தணிகை'',
28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[சி/1685]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 24–9–1918
மறைவு: 27–2–1992

6-ம் ஆண்டு நினைவஞ்சலி
மலர்வு: 1–5–1960
மறைவு: 28–4–1986

அமரர்
**கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)

அமரர் ஏகபுத்திரர்
**தாமோதரம்பிள்ளை நந்தகுமார்**
(பல்கலைக்கழக மாணவன், மொறட்டுவை)

பாருலகை விட்டுப் பரலோகம் சென்ற எங்கள் செல்வங்காள்! பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், அறிவின் சுடரொளியாய், கடமை வீரராய், எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வங்காள்! மண்ணில் மடியுமட்டும் மாறாக் கவலை வைத்தீர்கள். உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்கா. நாளை (28 – 03 – 1992) சனிக்கிழமை நடைபெறும் எங்கள் தலைவரின் ஆத்மசாந்தி - அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

கண்டி வீதி, கொடிகாமம்.

[20215]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 06 — 1912

மறைவு: 26 — 02 — 1992

திருமதி
**சதாசிவம் தங்கச்சியம்மா**

திராப்பசி நீக்கி தித்திப்பு மொழி பேசி
சோராமல் எங்கள் துயர் துடைத்திர் — எம்தாயே!
ஆரா அமுதன் அடியடைந்த அம்மம்மா– நாம்
தேரா வழிநின்று திகைக்கின்றோம் நீங்களின்றி!

உங்கள் பிரிவால் துயருறும்;

**பேரப்பிள்ளைகள்:**
சிவபாலசுந்தரம் - சுகிர் தமலர்,
மகேந்திரராசா - வதனராணி,
தெய்வேந்திரராசா - மாலினி(ஜேர்மனி),
சுரேந்திரராசா, தவமணிதேவி - மகாலிங்கம்.

**பூட்டப்பிள்ளைகள்:** தக்ஷிகா, ஷபீன்.

'' ரத்தின வில்லா '',
267, பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

[20219]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கச்சதீவும் இந்தியாவும்

கச்சதீவுக் கடலில் தமிழக மீனவர்களை ஸ்ரீலங்காப் படையினர் தாக்குவது, துன்புறுத்துவது தொடர்பான விவகாரத்தை பெரிதாக்கும் முயற்சியில் இந்திய மத்திய அரசு திடீரென ஈடுபட்டிருக்கிறது.

ஈழத் தமிழ் மீனவர்கள் ஸ்ரீலங்காவின் கடற்பிரதேசத்தில் வைத்துக் கொல்லப்படுவதும் தாக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும், அவர்களின் உழைப்பும் உடைமைகளும் சூறையாடப்படுவதும் கடந்த பல வருடங்களாக நடந்து வரும் அக்கிரமங்கள்.

தமிழக மீனவர்களும் இனத்தால் தமிழர்களாக இருப்பதால், அவர்கள் மீதும் தமது அடாவடித்தனங்களை அவிழ்த்துவிடலாம் என்ற மனத்துணிவுடனும், இனத்துவேசத்துடனும் ஸ்ரீலங்கா கடற்படையினர் நடந்து கொள்கின்றனர்.

இது இன்று நேற்றுத் தொடங்கியதல்ல. தமிழகத்தில் சர்வாதிகார ஆட்சி நடத்த முயலும் முதலமைச்சர் ஜெயலலிதா பதவிக்கு வந்த பின்னர் ஆரம்பித்ததும் அல்ல. ஈழத் தமிழ் மீனவர்கள் மீதான கொடுமைகள் ஆரம்பமான போதே தமிழக மீனவர் மீதான துன்புறுத்தல்களும் தொடங்கி விட்டன.

எனவே இது விடயத்தில் இதுவரை அக்கறையோ, பெரிய அளவில் ஆர்வமோ காட்டாதிருந்த இந்திய மத்திய அரசு திடீரென அதனைத் "தூக்கிப் பிடிக்கிறது!" அதற்குக் காரணமும் உண்டு; பின்னணியும் உண்டு. [சோழியன் குடுமி சும்மாவா ஆடும்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் உலகளாவிய மதிப்பையும், அவர்களுக்கு தமிழகத்தில் உள்ள ஆதரவையும் நசுக்கிவிட வேண்டும். இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்து நின்று போராடி, இந்தியாவின் இராணுவத்தை வென்று ஈட்டிய புகழை ஒழித்துவிட வேண்டும். அதன் பொருட்டு அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்பது இந்திய மத்திய அரசு உள்ளத்தாரின் பெரும் இலக்காகும்.

ராஜீவ் காந்தி கொலையை ஓர் ஆடுகளமாக்கி அதனைப் பயன்படுத்தி புலிகளுக்கு அபகீர்த்தி உண்டுபண்ணும் முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டு வருவது தெரிந்ததே,

தங்களது பெரும் இலக்கை எய்துவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தைத் தமது கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது அவர்களின் ஆசை. ஆனால் புலிகளுடன் பேசாமலோ அல்லது அவர்களுடன் நல்லுறவை வளர்க்காமலோ இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரியும். (ஆனால் அதனை வெளியில் காட்டிக் கொள்வதில்லை)

இத்தகைய ஒரு பின்னணியில், கச்சதீவை ஒரு கருவியாக வைத்து, ஸ்ரீலங்கா அரசு மீது அழுத்தத்தைப் போடவும், அதனைத் தன்வசமாக்கவும் இந்தியா திட்டமிடுகிறது. அந்தத் திட்டத்திற்கான உத்தியின் ஆரம்பமே ஸ்ரீலங்காத் தூதுவரை நேரில் அழைத்து எச்சரிக்கும் ராஜீக நடவடிக்கை! தமிழக மீனவர் தாக்கப்படும் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராவ், தமிழக முதலமைச்சருக்கு உரு ஏற்றி விடுவதும் அதற்கான அத்திவாரமே

இது விடயத்தில் ராவின் மிரட்டலை பிரேமதாசா எப்படி நோக்குகிறார் அல்லது அணுகப் போகிறார் என்பதைப் பொறுத்தே அதன் வடிவம் அமையும்.

# 9, 200 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

கொழும்பு, மார்ச் 27

கடந்த வருட ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 9 ஆயிரத்து 200 மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் அந்தப் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். அவர்களில் 47 ஆயிரத்து 250 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு வேண்டிய தகைமைகளை பெற்றிருந்தனர் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல கூறினார்.

கடந்த வருடப்பரீட்சையில் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் என்.எம்.ஜே எம். ஜெயரத்தின ஆகக் கூடுதலாக 365 புள்ளிகளைப் பெற்றிருந்தார். ஆனந்தாக் கல்லூரி மாணவன் எம்.எச். வி.எஸ். ஜினதாஸ 360 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், றோயல் கல்லூரி மாணவன் உதாரா குலரத்னா 357 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

இவர்கள் மூவரும் பொறியியல் கல்விப் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். [த-எ)

## தீவுப்பகுதி மாணவருக்கு நெடுந்தீவில் பரீட்சையாம்

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதிகளில் இருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான ஜி.சி.ஈ. உயர்தர விசேட பரீட்சையும் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான பரீட்சை நிலையம் நெடுந்தீவில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை — கடந்த டிசம்பரில் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணப் பத்திரப் பரீட்சையில் வினாத்தாள் பற்றாக்குறை காரணமாக தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குத் தோற்ற முடியாது போன சுமார் 250 தீவுப்பகுதி பரீட்சார்த்திகளுக்கான விசேட பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி நெடுந்தீவிலும் நயினாதீவிலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## இரண்டு வார நிவாரணம்

நாவலி, மார்ச் 27

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1,600 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை யாழ். செயலகம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப் பிரிவிலுள்ள கடற்றொழிலாளர்கள் தமக்கு நிவாரணம் தருமாறு கோரி அண்மையில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியது தெரிந்ததே.

(த-100)

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

குமண கப்பலில் வந்த 143 தபால் பொதிகள் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இன்று தொடக்கம் உள்ளூர் வெளியூர் தபால் விநியோகம் நடைபெறும் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. ஆ. மயில்வாகனம் அறிவித்துள்ளார். [இ]

## தீவுப் பகுதி மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

தீவகப் பாடசாலைகளில் கல்வி கற்று 1991 ஆம் ஆண்டில், ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்து, அப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்ற அனைத்து மாணவர்களையும் தமது நிரந்தர பாடசாலை அதிபர்களை இம் மாதம் 30 ஆம் திகதி சந்திக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கோரியுள்ளார். [இ]

## ஊர்காவற்றுறையில் பொலீஸ் நிலையமாம்

கொழும்பு, மார்ச் 27

ஊர்காவற்றுறையில் பொலீஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. நூறு பொலீஸார் அங்கு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராஜா இதனைத் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் மோகனதாஸ் புதிய பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றுகின்றார்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகள் அனைத்திற்கும் இப் பொலீஸ் நிலையம் சேவையாற்றும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### மட்டக்களப்பில்

## இராணுவம் இருப்பினும் அன்னை பூபதி நினைவுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மட்டக்களப்புப் பகுதியில் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்துவதில் மக்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

வீதிகளில் பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. அன்னையின் உருவப் படங்கள் அலங்காரப் பந்தல்களில் வைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் ரோந்து வரும் வேளைகளில் அவசர அவசரமாக அவற்றை அகற்றுவதும், பின்னர் அவர்கள் சென்றதும் அவற்றை அமைப்பதுமாக மக்கள் காணப்படுகின்றனர்.

சிரமதானங்கள், பொதுப் பணிகள், கருத்தரங்குகள் ஆகியனவும் அன்னையின் நினைவாக அங்கு இடம் பெற்று வருகின்றன.

[அ-5]

## கனடா சென்ற தமிழ்ப் பெண் தமது இரு குழந்தைகளை கொன்றாராம்

கொழும்பு, மார்ச் 27

கனடாவில் குடியேறிய கோப்பாய் வாசியான இலங்கைத் தமிழ்ப்பெண் ஒருவர் தனது இரண்டு பெண் குழந்தைகளையும் கழுத்தை நெரித்துக் கொலை செய்தாராம்.

கடந்த வெள்ளிக்கிழமை டொரன்டோவில், கெனடி வீதியில் உள்ள அந்தப் பெண்ணின் இல்லத்தில் வைத்து இடம்பெற்ற இச்சம்பவம் கனடாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

### செங்கலடியில்

## தப்பிய படையினர் சுட்டு இரு மாணவர்கள் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிக்கித் தப்பிச் சென்ற இராணுவத்தினர் சிலர் அங்குள்ள பாடசாலை ஒன்றினுள் புகுந்து கண்மூடித்தனமாகச் சுட்டனர்.

இச்சம்பவத்தில் அங்கிருந்த இரு மாணவர்கள் உயிரிழந்தனர் என்றும் வேறு மூன்று மாணவர்களும் ஆசிரியர்களும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

செங்கலடித் தாக்குதலில் 15 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதும் படையினரிடமிருந்து நவீன ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதும் தெரிந்தவையே [இ-5]

## புலிகள் குறித்து.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டம் ஒன்றில் நேற்று அவர்கள் கலந்து கொண்டனர். அங்கு வைத்தே அவர்கள் முண்கண்ட கருத்தை வெளியிட்டனர்.

இரு இனங்களுக்கும் இடையிலான அனைத்துத் தொடர்புகளும் அறுந்துள்ள நிலையில் தென்னிலங்கையில் அரச அதிகாரத்தின் கீழ் இயங்கும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் செய்திகளைத் திரித்தும், தவறாகவும் கூறி வருகின்றன. நேரில் கண்டபின்தான் இங்குள்ள நிலைமைகளை நாம் உணர்ந்துள்ளோம் — என்றும் அவர்கள் மேலும் அங்கு தெரிவித்தனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தூதுக்குழுவிடம் பின்வரும் வேண்டுகோளை விடுத்தார்.

வடபகுதி மக்கள் படும் இடர்களையும் அகதிகளின் அவலங்களையும் நேரிலே கண்டும், கேட்டும் அறிந்த நீங்கள் இப்பிரச்சினைகளுக்கு நியாயமான நிரந்தரமான தீர்வு ஒன்று ஏற்படவேண்டுமாயின், முதலிலே நிபந்தனையற்ற ஒரு போர் நிறுத்தத்தின் தேவைபற்றி இலங்கை அரசிடம் எடுத்துக் கூறுங்கள் — என்று கேட்டுக்கொண்டார்.

[அ-5]

## இன்று

தென்மராட்சி, மார்ச் 27

சாவகச்சேரி கற்றிகு வடக்கு பாரதி சனசமூக நிலையம், படிப்பகம் ஆகியவற்றின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை நிலைய மண்டபத்தில் தலைவர் சி. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் [இ-117-30]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும். [இ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 27

பலாலி ஆசிரிய கலாசாலை முதலாம் வருட மாணவர்களுக்கான தட, கள விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 27

மனைப்பொருளியல் சேவைக்காலப்பயிற்சி வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நாளை இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 27

குருநகர் தொடர்மாடி சென்றூட்ஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் திரு. ஜே. இராஜரெட்ணத்தின் மூன்று சில்லுச் சைக்கிள் ஓட்ட நிகழ்ச்சி தொடர்மாடி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

மூன்று நாள் சைக்கிள் ஓட்ட நிகழ்ச்சியை திரு. ஜே. இராஜரெட்ணம் இன்று மாலை 5-30 மணிக்கு ஆரம்பிப்பார். [உ]

## 101 அகதிகள் ஐ நா. தூதரக முகாமில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

எம். வி. ராமானுஜம் கப்பலில் மன்னாருக்கு நேற்று முன்தினம் வந்தடைந்த 528 அகதிகளில் 101 அகதிகளை ஐ. நா. அகதிகள் தூதரகம் பொறுப்பேற்றது.

இந்த அகதிகள் பேசாலையில உள்ள ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் வீடு சென்றனர்.

அதே சமயம் மற்றுமொரு தொகுதி அகதிகளுடன் மற்றொரு கப்பல் இன்று மன்னார் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது [இ-3]

## ஓய்வு பெறுகிறார்

கொழும்பு, மார்ச் 27

அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த கொழும்பு பேராயர் அதிவண ஜே ஜே. ஞானப்பிரகாசம் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் ஓய்வு பெறவிருக்கின்றார். [இ]

## விசர்நாய்க்கடி தொடர்பான கலந்துரையாடல்

விசர்நாய்க்கடி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வை. எம். சீ ஏ மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது.

சுகாதாரப் பகுதி அதிகாரிகள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றின் விசேட ஆணையாளர்கள், யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களை தாக்குவது புலிகளாம்!

## கதை விடுகிறார் தளபதி

கொழும்பு, மார்ச் 27

தமிழக மீனவர் மீது ஸ்ரீலங்காக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டை இலங்கைக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ நிராகரித்தார்.

இந்திய — ஸ்ரீலங்கா நல்லுறவைக் கெடுக்க, விடுதலைப் புலிகள் இராணுவ சீருடையில் சென்று தமிழக மீனவர் மீது தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

ஸ்ரீலங்காக் கடலில் இறால் ஏராளமாக உள்ள பகுதிகளில் தமிழக மீனவர்கள் தொழில் செய்வதை தமது கடற்படையினர் கண்டு கொள்ளாது இருந்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

[உ-எ-10]

# பாடசாலைகளெங்கும் அன்னை பூபதி நினைவுநாள்

## முதலாம் திகதி அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

அன்னை பூபதி நினைவாகத் தமிழீழத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நினைவுக் கூட்டங்களை நடத்துவதென தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

அன்றைய தினம் ஒவ்வொரு பாடசாலையிலும் குறைந்தது இரண்டு மணி நேரம் நினைவு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும்—

ஆசிரியர்களது சிறப்புரைகளையும், கவிதை, பேச்சுக்கள் போன்ற நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்யுமாறும்—வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு மையப் பாடசாலைகளாக விளங்கவிருக்கும் பாடசாலைகளில் மேற்படி நிகழ்ச்சிகளை எதிர்வரும் 31ஆம் திகதி நடத்துவது என்றும் ஒன்றியம் தீர்மானித்துள்ளது. [இ-5]

### புலிகள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாடாளுமன்றத் தெரிவுக் குழு மறுத்து விட்டது என்றும்—

மூன்றாவது தரப்பு ஊடாக அனுப்பப்படும் செய்திகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும்—

விடுதலைப் புலிகள் நேரடியாகவே தெரிவுக்குழுவுக்கு எழுதவேண்டும் என்றும்—அந்த பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-எ]

### கொலை..

]1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாறு:-

★ கொக்கட்டிச் சோலையில் இராணுவ நடவடிக்கையால் பொதுமக்கள் கொல்லப்படவில்லை. நிலக்கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் தமது சகாக்கள் இருவர் கொல்லப்பட்டதனால் ஆத்திரமடைந்த படையினர் சிலரின் கட்டுப்பாடற்ற நடத்தையினால் தான் இப்படு கொலை இடம்பெற்றது.

★ கொக்கட்டிச் சோலைச் சம்பவத்தில் மரணமடைந்தவர்கள், காயமடைந்தவர்கள் சொத்துக்களை இழந்தவர்கள் ஆகியோருக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும். மொத்தம் 52 லட்சத்து 40 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்கப்படவேண்டும்.

★ இப்படுகொலைச் சம்பவத்தில் எந்தவொரு படையினரும் அடையாளங்காட்டப்படவில்லை; அவர்களுக்கு எதிராக ஆதாரம் காட்டப்படவில்லை. எனவே தவறிழைத்த படையினரை நீதிமன்றத்தின் முன் கொண்டு வரமுடியாதிருக்கின்றது. இந்த நிலையில் இராணுவம் அதன் சொந்த விசாரணையை நடத்தி இக்குற்றச் செயல்கள் தொடர்பாக இராணுவத்திற்கு எதிராக இராணுவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும்

★ படையினர் இதுபோன்ற இராணுவ ரீதியற்ற செயல்களில் ஈடுபடக் கூடாதென்பதை வலியுறுத்தும் வகையில் அவர்களுக்கு தெளிவான உத்தரவும் பயிற்சியும் வழங்கப்படவேண்டும்.

★ பொது மக்களுக்கு எதிராக இவ்வாறு ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டால் கடும் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்பதை ஆயுதப்படையினர் உணர்ந்து கொள்ளச் செய்யவேண்டும். (அ-எ)

### தீர்வுக்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்படுகிறது.

இதே வேளை — நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் ஏப்ரல் 21ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### இராணுவத்துக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்கள் இப்போது பலியானதை ஒப்புக்கொண்டார்.

மணலாறில் நடந்த ''ஹயபார'' இராணுவ நடவடிக்கையின் போது அரசு படைகள் பல நவீன ஆயுதங்களை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்ததையும்—

கவச வாகனங்கள் போன்ற கனரக வாகனங்கள் புலிகளின் தாக்குதல்களில் சேதமடைந்ததையும் — கேர்ணல் முனசிங்கா மேலும் ஒப்புக்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் புதிய யுக்தி நிறைந்த தாக்குதல் முறையை எதிர் கொள்வது படையினருக்குக் கஷ்டமாகி வருவதையே கேர்ணல் முனசிங்காவின் நிலைப்பாடு எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

### ஜெயலலிதா..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சபையில் துணைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அண்மையில் செல்வி ஜெயலலிதா புதுடில்லி வந்தபோது இவ்விஷயம் குறித்து விரிவாக அவருடன் பேசப்பட்டதாகவும் திரு. சவான் தெரிவித்தார்.

இந்தியாவில் சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டுவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகவும் திரு. சவான் கூறினார்.

அதேசமயம் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை —குறிப்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவின் உயிருக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை முறியடிக்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

ந்தோ ஸ்து படைகள் இ ற்காக உஷார்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு சொன்னார். (இ-எ)

## விண்ணப்பப் படிவம் கையேற்பு

நாவலி, மார்ச் 27

யாழ். பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு இலக்கம் தெரியாத 'பி' விண்ணப்பப் படிவங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

இந்த அலுவலகத்தில் பதிவு இலக்கம் தெரிந்த 'ஏ' விண்ணப்பப்படிவங்கள் மாத்திரமே இதுவரை கையேற்கப் பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. (த-100)

## வட - கிழக்குக்கு 78 புதிய பிராந்திய அரச அதிபர்கள்

கொழும்பு, மார்ச் 27

வடக்கு—கிழக்குக்கு 78 புதிய பிராந்திய அரச அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர். நாட்டில் தற்போது நிறுவப்பட்டு வரும் ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்திய செயலகங்களை நிர்வகிப்பதற்கு 230 பிராந்திய அரச அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களில் 78 பேர் வடக்கு — கிழக்கில் பணியாற்றுவர். மொத்தம் 328 புதிய நிர்வாகப்பகுதிகள் இவர்களது நிர்வாகத்தின் கீழ் வரும். [த-எ]

## அதிகாரியின் மனைவி கைது

பெண் ஒருவரின் 'மரணம்' தொடர்பாக இராணுவ அதிகாரி ஒருவரின் மனைவியும் இன்னுமொருவரும் அவிசாவளைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தெஹியோவித்த என்னுமிடத்தில் உள்ள வீடு ஒன்றினுள் அப்பெண்ணின் உடல் கத்திக்குத்துக் காயங்களுடன் காணப்பட்டது. [இ-எ]

## 2 முண்டங்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

பிபிலை — பிற்றகொட்டுவவில் உள்ள நில்கல சரணாலயத்தில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இரண்டு ஆண்களின் சடலங்கள் பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பழங்கள் பிடுங்குவதற்காகக் காட்டுக்குச் சென்ற 4 ஆண்கள் வீடு திரும்பவில்லை என்று முன்னர் பொலீஸுக்கு முறையிடப்பட்டிருந்தது. [உ-எ]

## ரூ. 38 லட்சம் பெறுமதியான தங்கப்பாளம்

கொழும்பு, மார்ச் 26

38 லட்சம் ரூபா பெறுமதியான 60 தங்கப்பாளங்களைக் கொண்ட பை ஒன்றை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

இந்தப்பை சிங்கப்பூரில் உள்ள இலங்கையர் ஒருவரால் கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு விலாசமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. [இ-எ]

### ராஜீவ் கொலை:

## பிரான்ஸின் உதவி கோரப்படுகிறது

புதுடில்லி, மார்ச் 27

ராஜீவ் கொலை தொடர்பாக பிரான்ஸிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களைக் கைது செய்ய பிரான்ஸ் உதவ வேண்டும்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரெஞ்சு வெளியுறவு அமைச்சரிடம் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வேடோ பெலைரோ இவ் ... வேண்டுகோள் விடுத்தார். [இ-10]

### 'உதயன்' கிண்ண உதைபந்தாட்டம்

# அரையிறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும்

## பருத்தித்துறையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 27

''உதயன்'' வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

இன்று மாலை நடைபெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் வல்வை புளூஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி விளையாடும்.

நாளை மாலை நடைபெறும் மற்றைய அரையிறுதிப் போட்டியில் திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதும்.

இந்த ஆட்டங்கள் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறும்.

நடைபெற்று முடிந்த கால் இறுதியாட்டங்களில் வல்வை புளூஸ் அணி நவசக்தி விளையாட்டுக் கழக அணியை 5-0 என்ற கோல் கணக்கிலும்—

பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை 2- என்ற கோல் கணக்கிலும் தோற்கடித்தன. [உ]

## நீதிமன்றத்தில் ஒஸி மனு தாக்கல்

தாம் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதை எதிர்த்து அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் ஒஸி அபயகுணசேகரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இவரைப்போன்று கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமசிறி பெரேரா, பொருளாளர் லெஸ்லி பெரேரா ஆகியோரும் தாம் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதை எதிர்த்துமேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். [இ-எ]

# மட்டுநகரில் கைதானோர் படையினரால் சித்திரவதை

மட்டக்களப்புப் பகுதியில் படையினர் 13 தமிழர்களைக் கைது செய்து அவர்களைக் கடும் சித்திரவதைக்கு உட்படுத்திய பின்னர் அவர்களில் 12 பேரை விடுதலை செய்தனர். ஒருவர் படையிரால் ஹெலி ஒன்றில் ஏற்றி செல்லப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் நடந்தது.

வவுணித்தீவு முகாமில் இருந்து வெளியேறி வந்த படையினரே பாவற்கொடிச்சேனை, ஊற்றுமடு, தண்டியடி, கொத்தியாவலை மண்டபத்தடி ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்து மேற்படி 13 பேரையும் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பாடசாலை அதிபர் என்றும்— நல்லதம்பி சின்னவன் என்பவரே ஹெலியில் ஏற்றிச் செல்லப்பட்டார் என்றும்— தெரிவிக்கப்பட்டது. [இ-5]

# மரண அறிவித்தல்கள்

## செல்வி அருளம்மா சுப்பிரமணியம்

செல்விஅருளம்மா சுப்பிரமணியம் (உத்தமி அக்கா) நேற்று இரவு காலமானார். அன்னார் திரேசம்மாவின் சிறியதாயாரும், அல்பிறட்டின் மாமியாரும், பப்ரிஸ்ரா, சாளற், றோசற், விவியா, ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (27-3-92) பி. ப. 4.00 மணிக்கு திருக்குடும்பக் கன்னியர் மடச் சிற்றாலயத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
தலைவி
திருக்குடும்பக்கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

(20252)

## இளையதம்பி கந்தையா

அளவெட்டி வடக்கு, அம்பத்தைபைச் சேர்ந்த திரு. இளையதம்பி கந்தையா [26-03-92] அன்று காலமானார்.

அன்னார் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், பரிபூரணம், அருந்தவநாதன் [இ. போ. ச. சாரதி வவுனியா], பாலசிங்கம் [கனடா], யோகநாதன் [கனடா], யோகேஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற கணபதிப்பிள்ளை, தவரஞ்சிதம், நவரஞ்சிதம், மைதிலி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மாமனாரும்' நாகபூசனி [ஜேர்மனி], சிவநேசன், சபேசன் [U. K]. உமாநந்தினி [இந்தியா], உசாந்தினி, பிரம்யா, தவராஜசிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [27-3 92] இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் கேணிக்கரை அளவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

கேணிக்கரை,
அளவெட்டி.
[20251]

தகவல்:
திருமதி க. வள்ளிநாயகி

மேலும் மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org